உ

# கலைமகளந்தாதி.

லங்காவர்த்தமானி அச்சியந்திரசாலை,

மட்டக்களப்பு.

1930.

கடவுள் துணை.

மட்டக்களப்பு

ஆரையம்பதி

பாலபண்டிதர்

# ஸ்ரீமான் செ. சீனித்தம்பி

ஆசிரியரவர்கள்

இயற்றிய

# கலைமகளந்தாதி.

லங்காவர்த்தமானி அச்சியந்திரசாலை, மட்டக்களப்பு,
1930.

TIRUVANMIYUR MADRAS-41

## தற்சிறப்புப் பாயிரம்

### [வெண்பா]

உலகுமுன் ஓது மொருகை முகன்றாள்
பலபட வேத்திப் பணிந்தே—கலைமகள்மீ
தந்தாதி பாடவென் அம்போ ருகத்தாளைத்
தந்தாள வாராளோ தான்.

### நூல்

1 அன்புருவே யம்மே அருமறையி னன்றொளிரும்
இன்புருவே ஏழைக் கிரங்கியா—னென்புருகப்
பாடுங் கவியிற் பழுதொன்றும் வாராமே
நாடி யுறைகவென் னை

2 நாவலமும் நாற்பொருளார் நற்றமிழி னேதுநாற்
பாவலமுங் கொண்டு பயன்றுய்க்க—ஆவல்
பெருகுதம்மே ஒப்பிலயன் பெண்மணீ யுள்ளம்
உருகுதம்மே என்செய்வ லோ

3 ஓமென் பொருளே உலகு நிறையொளியே
வாவெண் மதிக்கலை வாணியே—பூமன்னுங்
கள்ளக் கருங்குழலி காசகற்றி யானேதும்
வெள்ளைக் கவிப்பொருளை வேண்டு

4 வேணவா மீதூர வெண்டா மரையாளைக்
காணவா வென்று கவிபுனைய—நாணம்
மடம்பயிர்ப் பச்சம் வருகுவதே னன்னே
உடம்புயி ரோடுமுன் னேறு

5 துதியேன் பிறதெய்வந் தொண்டாற்றே னுள்ளம்
பதியேன் பிறபாப் பகரேன்—விதியே
விரும்பி நுகர்ந்து விளையாடுந் தெய்வக்
கரும்பேநீ அல்லாக் கடை

6 கண்ணே கருமணியே கற்பகமே காதல்கூர்
எண்ணே எழுத்தேயென் இன்பமே—நண்ணார்
இருளே இரவியே இன்புலவோ ருள்ளத்
தருளே அருளே அருள்

7 அருவுரு வாண்பெண் அலியிறந்து நின்ற
திருவுருவே செந்தமிழ்ச் செல்வீ—அரிமருகி
வந்தேன் மனத்து மகிழ்ந்தேன் மலர்ப்பாதம்
தந்தேனென் றேதோர் தரம்

8 தண்டமிழை வேட்டுத் தமியேன் தடுமாற
மண்டலத்தி லேபுலவர் வாய்மொழியை—உண்டு
களித்திருந்தா லன்ன களவை வெளியாப்
பழித்துரைப்பன் நின்பதிக்குப் பார்

9 பாரம்மா நீண்ட பசிக்குப் பழந்தமிழ்க்கூழ்
வாரம்மா என்றன் வயிறார—வீரகவிக்
கம்பப் புலவற்குக் காட்டு திருவடியைக்
கும்பிட்டேன் அன்பு கொள

10 கொந்தாடு கூந்தல் கொழுகி யடையமேல்
வந்தாடு வண்டு மயலுற—எந்தாய்
வருகுவதெக் காலமோ வாலிழையே அன்பு
தருகுவதெக் காலமோ தான்

11 தாயே சரசுவதி சற்றே மனமுருகி
நீயே சலியீய நின்றக்கால்—வாயே
இருங்கவிச் சாகரமுண் டேப்பமிட் டென்மேல்
வருங்கவியை வெல்லுமே மற்று

12 மண்டலத்து மன்னருமென் வண்டமிழை வாய்மடுத்
துண்டு சுவைக்க உசவுவாய்—ஒண்டொடீ
ஒன்பது கோணத்தி னுள்ளே உறைந்துலகம்
இன்புற நிற்பவளே

13 எடவிழ் வெண்டா மரையுறைவ தன்றிமற்
றேடகன் நாவொன்றே ஆகுமோ—பாடியான்
தேடிவதும் வெள்ளைத் திருவடியே செந்தமிழ்
கூடு கலைப்பெண் கொடிக்கு

14 கொடிப்பூவே கொம்பேயகை கூப்பிக் குனிந்துன்
அடிப்பூவைப் பற்றி அழுதேன்—படிப்பினுக்
காயிரங்கி அன்பாய் அணைத்து மடியிருத்தித்
தாயினிய தீம்பாற் றமிழ்

15 தண்டை பணிதாட் டலைமிசைத் தாங்கிவாய்
விண்டழ நீரை விழிசொரியக் — கண்ட
சலைபழுதே நினதூருக் காட்டிக் கனிகத
விலைபழுது சொல்லுள் விடு

16 விம்முமே யுள்ளம் விளித்தழலா யின்குரற்
கம்முமே நீபதனைக் காண்டியா — லம்மேவா
ஆய் கலைகள் அறுபத்து நான்கினையும்
எய உணர்த்தா யெனக்கு

17 குயிலே கவிக்கார்முன் கூத்தாடி நிற்கும்
மயிலே மகிழ்ந்தடியேன் வாக்கிற் — பயிலநாப்
பாடு முலகு படிக்கு மெனக்குமோர்
வீடுங் கிடைத்து விடும்

18 விட்டுப் பிரிந்திரேன் வெண்கமலத் தாட்டுணைப்பக்
கட்டிப் பிடித்தே கதறுவேன் — தட்டிப்
புடைத்தாலும் போகேன் புலந்து நரகத்
தடைத்தாலும் போகேனம் மா

19 மாதாவைத் தேடி மகவோடி வந்தணவு
தாதாவென நேசிக்குந் தன்மைபோல் — ஓதயான்
முன்னின்றே னன்னாய் முறுவலித்த தன்பார
என்னினைறு யென்று யெனை

20 ஐய இடையா யடிதோய் அளகத்துப்
பைய விருந்தளி பாடவே — கையிலுறு
புத்தகமுங் கொண்டு புவிபுகழ வந்தென்னை
வித்தகனாக்கி விடு

21 விரிந்த கலையுணர வேண்டிவெண் கஞ்சத்
திருந்தவளை யஞ்ஞான்று பேத்தப் — பொருந்து
இலையே இதயம் பொறியைந்து மொன்று
திலையே அருளா யினி

22 இருகரங் கூப்பி யிறைஞ்ச விதயம்
உருக முதற்பாவும் ஓத — முருகவிழும்
பூவிடைந்து பொற்பாதங் கன்றப் புலம்புறுமென்
நாவடைந்து நின்று நகும்

23 நடுவன் அழைக்கவரும் நாளிலே என்னுப்
படுமருட் பாவின் பயத்தால்—முடுகிவரும்
பாவ மகற்றிப் பரகதிக்கண் உய்க்குமதை
ஆவலிக்கு தம்மே அகம்

24 அகக்கறை நீக்கிய அம்புலியும் நாணும்
முகத்தொளியை மூப்பான் முதல்வன்—சகத்துள்ளார்
உள்ளத் திருளோட்டு மொப்பிலுரை என்னுவில்
வெள்ளத் திழிய விதி

25 திருமால் மருகி திருப்பாதங் காட்ட
வருமாலோ வென்று மகிழ்ந்தே—ஒருமாலை
கைக்கொண்டு கண்பூத்தேன் காதல் கழிகூர
மெய்க்கொண்டாள் வித்தை மிக

26 கண்ணுங் கருத்துங் களித்துக் கனவிலுங்கண்
டெண்ணுவது மெண்ணு இசைப்பதுந்—தண்ணந்
தவளத் தனிப்பூந் தவிசில் உறையும்
அவளை அகத்துக் கொள

27 கொடியுங் குவளையுங் கொண்டலுங் கோங்குந்
துடியும் பிடியியலுந் துப்புப்—படிகமுங்
கொண்டேயென் உள்ளங் குளிர வருமுருவைக்
கண்டே னதுவே கலை

28 கண்ணுக்குத் தோன்றிக் கருத்துட் படியாத
பெண்ணுகங்கா வேட்டான பிரமனும்—எண்ணிலா
விண்ணால விழுமியோனை வேதா விழிப்பிக்க
எண்ணினுள் கொல்லோ வெனை

29 வெறிகமழும் வெண்டா மரைமீது மேவி
அறிவனும நீயுமற மாற்ற—வறியேன்
விருந்தினன் வந்தேன் மிகமெலிந்தே னம்மே
அருந்தமி ழன்ன மளி

30 அளிமூரல அஞ்செஞ் சிலம்பு மாற்றக்
களிமயிற் சாயலுங் காட்டி—நளினவெண்
பூவி லிருந்து புவிபோற்ற வந்தடியேன்
நாவி லிருந்து நடி

31 நனந்தலை ஞாலத்து நல்லவர் ஈட்புத் [ளியும்
தினம்பெருகுஞ் செந்தமிழுஞ் சீர்க்கும்—மனந்தெ
மாதானு பங்கி மனத்தில் உறைந்தகலை
மாதா மனத்து வர

32 வணங்கி வணங்கியான் வாயார வாழ்த்தும்
அணங்கே அமுதேயுள் ளன்பே—மணங்கமழும்
சோதாய் கொடியாய் குமரற் கிளையவெண்
போதாய் அளியுன் பொருள்

33 பொருளடைந்தேம் பொன்றுப் புசழடைந்தேம் பூத்த
தெருளடைந்தேஞ் செந்தமிழுந் தேர்ந்தேம்—இரு
உள்ளக் கமலத்தி னுள்ளே ஒளிகான்று [ளடைந்த
வெள்ளைக் கலைவிளங் க

34 கரங்குவியக் கண்ணோக்கக் காதாரக் கேட்கச்
சிரம்பணியத் தீங்கவிநாச் செப்ப—அருங்கலையாள்
வந்தா ளருமகவே வண்டமிழை வேட்டுமிக
நொந்தாயோ வென்ன நுவன்று

35 நுனித்து நுனித்து நொடிக்குமுன் னூறாய்
இனித்த தமிழ்ப்பா இயம்பப்—பனிந்த மலர்ப்
பாயலுறும் பாவாய் படிகக்கோல் பற்றியென்
வாயிலுறும் நாவில் வரை

36 வரையருவி வீழ்வதென மல்கி மலர்க்கண்
நிரைநிரையா நீர்கால நின்றே—உரைபதற
மெய்யுஞ் சிலிர்க்க விடியல் எழுந்திரண்டு
கையுங் குவித்தேன் கலைக்கு

37 குழவி அழுதகுரல் கேட்டுக் குறுகிப்
பழகியதாய் பாலூட்டும் பான்மை—அழுகழுது
எங்கிருந்தாய் அம்மேநீ இத்தனைக்கும் ஏங்கியான்
அங்கந் துடிக்க அழ

38 அளிய அளிய அகங்குழைந்து கண்ணீர்
இழிய இழிய இருந்தேங்கல்—வெளிய
வனசத்தி வண்டமிழி வாணி மலரோன்
புனைசத்தி புத்தகத் தீ

39 தீம்பால் நிறமுந் திரள்புயலுஞ் செப்பரிய
கூம்பா மலருங் குரும்பையும்—ஓம்பார்
பெரும்புலவ ராவரோ பேசிலமற் றம்ம
அரும்புலமை சான்றாட் கணி

40 அணியே தமிழணியே அன்னமே ஆசை
மணியே மரகதமே மங்காப்—பிணியவிழ்பூங்
கோதை முடியணியுங் கொற்றவரு மென்கவிகொண்
டோதிப் பணிவர்கொல் லோ

41 ஓத வினையிரியும் உள்ளொளி ஓங்கிவரும்
போதம் பெருகுநற் புத்தியாங்—கீதம்
இனித்துக் கிளரும் இருநிதியாம் வெள்ளைப்
பனித்த மலராள் பதம்

42 பளிங்கோ நறும்பாலோ பங்கே ருகமோ
களங்க மறுமதியோ கண்டாய்—விளங்கியநின்
மேனிக் குவமை விரிப்பதெவன் வெள்ளிதழ்ப்
பூநச்சு வோயே புகல்

43 புகலரிய பாவிற் புகழேந்திப் புந்தி
அகல அகமடக்கி ஆளச்—சகலகலா
வல்லி வருவள் வரந்தருவள் வாய்வழங்குஞ்
சொல்லில் உயர்வு சொல

44 சொல்லும் பொருளும் துசடறத் தூக்கமற்
றல்லும் பகலுமை யாயிரம்—நல்ல
கவிபுனைய நெஞ்சே கலைமகளை என்றுந்
துவிகரங் கூப்பித் துதி

45 துலங்கு திருநீற்றின் தோற்றத தவடான்
இலங்கையடைந் தின்முக மின்றிக்—கலங்கும்
நிலைக்குத தளர்ந்துமுன நின்று வினவில்
தலைக்குத்தென் றோதாளோ தான்

46 தாளிரண்டுந் தாங்கவெண் டாமரைக் கன்றியெவ்
வாளிதயத் தாமரைக்கும் வாராதோ—நாளிருந்
தாவி கனிய அகங்கனிய ஆரணலைக்
கூவி அழைஉங் குயில்

47 இல்லை ஒருதுணை என்றடைந் தென்னுன்கு
பல்லை இழித்தியான் பாடினேன்—கல்லாக்
குறைவுடையே னாளாங் குதிகொள்ள ஞான
நிறைவுடையாய் நீவந்து நில்

48 நில்காப்பாய் நீயே நிலவுலகில் நெஞ்சுள்ளுந்
தொஃகாப் பியமுந் துணைக்குறியும்—பல்காப்
பழுக்க தமிழ்ப்பாப் பழம்புலவ ருண்ணப்
பழுக்க தமிழ்நாப் பழம்

49 பழைய பழைய பசுந்தமிழ்ப் பாடல்
விழைய விழைய விருந்தாய்க்—கழிய
சுவையீய வல்ல சுருதிக் கிறைவி
நவையீய வல்லவென் று

50 நாற்கவியும் நாற்பாவும் நாற்பொருளும் நாற்பாரில்
மேற்பட உள்ளத்து வேண்டுதும்—பாற்கமல
வீட்டி லிருந்தியாழ் மீட்டு விதிக்கின்பங்
காட்டி இருப்பாளைச் கண்டு

51 கண்ணும் வலமாடக் காக்கை கரைந்தாட
நண்ணுங் குறியால் நமக்குமலர்ப்—பெண்ணேகாண்
நச்சி வருவளென நானினைக்க நற்கெவுளி
இச்சிச்சிச் சென்ற திருந்து

52 தினமு மினியபொருட் டேனூறும் பூஞ்சொல்
இனமன்பு நூலா லிணைத்தே—வனவெள்ளை
உத்தமியே உன்கழுத்தில் ஓர்மாலை சூட்டுவேன்
முத்தமிழைத் தாவெனக்கு முன்

53 முற்றுவது மில்லையோ மூதறிவு நின்னன்பைப்
பற்றுவது மில்லையோ பாலனைச்—சற்றே
திறந்திருகண் ணோக்கிலயன் தேவீ எனக்கும்
இறந்து படுதல் இறும்

54 இறும்பூ திறப்பூகிஃ தெந்நா வலர்க்கும்
உறுங்கொலோ வென்றுலக மோத—நறுங்கமலத்
தாளே தொழுது தலைக்கொண்டேன் சங்கநிறத்
தாளே தமிழ்ப்புலமை தா

55 தாரணி வேந்தர் தலைதாழத் தாங்கலிலாக்
காரணி கூந்தல்கடிகமழ — வாரணிசெய் [தாய்
வெம்முலையாய் மின்னுருவாய் மேகலையாய் வேதத்
இம்மெனவென் உள்ளத் திரு

56 திங்களைக் கண்டரவு தீண்டிற்று லன்னமற்
றங்கண் முகமு மளகமும் — பொங்கியசீர்ப்
பூவகத்தாள் வந்து புவிபுகழப் புந்தியிலும்
நாவகத்து முற்றாள் நமக்கு

57 நமக்குத் துணைவேண்டி நாமகளை எண்ணி
இமைக்கும் பொழுதன்பி னேத்தச்— சுமக்குங்
கருங்கூந்தற் காடுமலர்க் காலடி தோய
வருந்தீங் ககற்றா வரும்

58 வண்ண மதிமுகமும் வாங்குவளைக்கையும்
எண்ணரிய கண்ணு மிருங்குழலுஞ் — சுண்ணம்
அணிந்த முலைக்குவடும் ஆன்பா லழகும்
பணிந்தவர்க் கன்றே படிப்பு

59 பச்சடைவெண் பங்கயமோ பாவலர்நன் னுவகமோ
இச்சக மீந்தான் இதயமோ — நச்சுபுகழ்
வேதமோ விண்முதலைம் பூதமோ வெண்கடலோ
ஓது கலைக்குறை யுள்

60 உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத் துறைய
விருப்ப முறுவன மேவுக் — திருப்பொலியுஞ்
சென்றவிட மெங்கணுஞ் சீர்திகழுஞ் செப்பரிய
தென்றமி ழோங்குஞ் சிறந்து

61 சிறைவண்டர் செப்புமின் செவ்வழி பாடி
நறையுண்ட நாண்மலர் நாண—இறைகொண்ட
வெள்ளைக் கமலமலர் மீதுறை வாளுக்கென்
உள்ளக் கவலை உற

62 உன்னை யடைந்துள் ளுருகிக் குறையுறுவ
தென்னை மணியை இருநிதியைப்—பொன்னைப்
புவியைப் பெறவல்லப் பூவகத் தோயே
கவியைக் கருதியே காண்

63 காணேன் உனையன்றிக் கண்கண்ட தெய்வத்தை
வாணாள் முழுவதூஉம் மண்ணகத்தே—வீணாப்
பிறதெய்வம் போற்றிப் பிழைத்தேன் பிரமன்
உறுதெய்வ மெல்லா முணர்ந்து

64 முத்து நிறமும் முறுவலுஞ்சின் முத்திரையும்
வைத்த கரதலத்து வன்னிகையும்—புத்தகமும்
ஏந்து முலையு மிணைப்பதமும் என்னெஞ்சிற்
சாந்துணையும் போமோ சகத்து

65 சங்கப் புலவர் தமிழ்ப்பா அமுதபுசித்
தங்கம் வளர்க்கும் அருங்கலையே—தங்குபுகழ்ச்
**சாமிநா தையன்** தலையளியில் நிற்குதியோ
நேமிசூழ் வையத்து நீ

66 நீலத் திருமால் நெடுந்துயிலன் நெற்றிவிழி
ஆலத்தன் பித்தன் அயனுக்கே—போலும்
வடுவிலை யென்று மணமாலை சூட்டிற்
றுடுபதி போன்ற உரு

67 உருவத்தை ஓதினேன் உள்ள முருக
அருவத்தை ஓதினேன் அம்மே—ஒருவித்தை
ஈந்தேன் மகனே இனித்துயரே லென்னமகிழ்
வாய்ந்தேயென் னேர்வருந்து வாய்

68 வாய்வந்த சொல்லி வறிதே யழுமகவைத்
தாய்வந் தணைக்குமத் தன்மைபோல்—ஆயாவென்
றெந்நேர முமிருந் தேங்கி அழுகின்றேன்
அன்னே எனைவந் தணை

69 தலைவலி தன்றினுந் தாயே சகல
கலைவலி யின்றிக் கணமும்—நிலவுலகில்
வாழேன் மடமையுற மாய்கின்றேன் மாய்கின்றேன்
கேளேன் புகழின்றிக் கீழ்

70 கீரன் நினது கிருபை கிளரச்சொல்
வீரம்பெற் றம்புலியும் வெம்பணியும்—ஆரயாச்
சூடும் பரமனொடு சொல்லாடி வெல்லுமதி
கூடுங்கொல் லோவெனக் கும்

71 குன்றெறிந் தோனுங் குறுமுனியுங் கூடல்வாய்த்
தென்றமி ழாய்ந்த சிவனுமாய்—ஒன்றிக்
கழக மிருந்து கலையாதே யின்னும்
பழைய வளர்க்கப் பணி

72 பத்தெட்டு மைந்தும் பதினெட்டுஞ் சீர்பூக்க
வித்திட்ட வென்னெஞ்சம் வெம்மைத்தால்—எத்தி
கல்விப் பசுங்கூழ் வளர்க்குங் கருமுகிலே [க்குங்
நல்வித்தை ஓம்புநீர் நல்கு

73 குணங்குறி யில்லாளைக் கொண்டெங்ங னேகொல்
வணங்கியான் நெஞ்சழுத்த வல்லேன்—இணங்கு
கலையெலா மோதிக் கசடகற்றி மெய்கண்
டுலைவிலா முத்தி யுற

74 உரிப்பொருளை எஞ்ஞான்றும் ஓதும் பொருளைக்
கருப்பொருளை வெண்பொருளைக் கண்ணுள்—இருக்
உருப்பொருளை வேதத்தி னுட்பொருளை உன் [தும்
பருப்பொருளை நெஞ்சே பணி [மைப்

75 பணியாரம் பூண்ட பரமன் பதியை
அணிதாக்க வல்லா ளடைய—அணியவெண்
செஞ்சூட்டுச் சேவல் சிறையடித்துக் கூவாயே
பஞ்சூட்டும் பாதம் படுத்து

76 படைக்கு மொருவனும் பற்றுந் துணைத்தாட்
கிடைக்குமோ கீழ்மை யகல—முடைக்குரம்பை
பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தன்மைத்தென்
பொய்ம்மறு மெய்யுட் பொருள்

77 பொருளல்ல வற்றைப் பொருளா நினைக்கும்
மருடீர வண்டமி ழோங்கத்—தெருமேடங்கக்
கொந்துற்ற கூந்தல் குடிகொள்ளச் சிந்தைக்கு
வந்துற்ற தம்மா மதி

78 மதிக்கின் றிலையோ மதியை மதிக்க
விதிக்கின் றிலையோ விரும்பித்—துதிக்கின்றேன்
நின்றும் இருந்துங் கிடந்தும் நினைவின்றி
என்று மிருந்தாளை யே

79 தாட்டுணை காட்டித் தவள மலர்காட்டி
வாட்டடங் கண்காட்டி வந்துற்றாள்—எட்டின்
புறத்தெழுதா வேதப் பொருளாளென் புந்திக்
கறத்த கலைபரிக் க

80 கவிசா கரப்பெருமான் கண்டேங்கா ணென்று
புவிசால வென்னைப் புகழ—நவிசாலுங்
கண்ணாய் அருள்நாற் கவிமழை காலக்கண்
டெண்ணா தனவெண்ணி யே

81 எண்ணும் எழுத்தும் இருவிழியாம் இல்லார்க்கோ
புண்ணாம் புறக்கணப் பொன்னுரையை—எண்ணி
வழங்குந் தமிழ்ப்புலமை வள்ளுவன்வாய் வாணி
வழங்கியென் கண்ணை மகிழ்த்து

82 மட்டாடு வண்டு மகிழ்தூங்க வண்ணப்பூம்
பட்டாடை கட்டிப் பணிபூண்டு—சிட்டற்கு
நந்தா வளர்க்கும் நலமூட்டி நால்வேதம்
அந்தா மரைமே லவள்

83 வடிவகி ருண்கண் மடந்தையுன் வண்ண
அடிதொழு தேத்து மதற்கோ—முடிநான்கு
பெற்றான் பிரமன் பிறங்கு கலையெல்லாஞ்
சொற்றா யெனக்குநீ சொல்

84 சொற்றொறுஞ் சொற்றொறுஞ் சோதி உருவத்தாய்
முற்றறி வூட்ட முறைமுறையே—பற்றும்
பிறப்பைப் பிரித்தேன் பெரும்பதம் பெற்றேன்
சிறப்புற்றேன் செந்தமிழுட் சென்று

85 செல்லுங் கருங்கடலுஞ் செந்தமிழுண் டேப்பமிட
அல்லும் பகலுமிருந் தாற்றிய—வல்ல
தவமென்னை சொல்லோ தமிழ்நா டிழைத்த
பவமென்னை மாதே பகர்

86 மாதவஞ் செய்தேனோ மற்றென் மனமறியப்
பாதகஞ் செய்தேனோ பங்கயத்தாய்—ஏதம்ம
வேதன் சிரத்து விதிக்கலையோ வெள்ளைப்பூம்
பாதந் தொழுதேன் பகர்

87 பருதிமேல் நின்றுலகிற் பாயிருளை நீக்கக்
கருதிக்கீழ்த் தோன்றுமக் காலை—வருதியோ
தள்ளற் கரிய தவள வுருக்கொண்டென்
உள்ளத் திமிரமோட

88 ஓது முறையெல்லா முன்பொருளே யன்றிமற்
றேது முறையேன் இருநிலத்தே—தாதூதி
ஆண்வண்டு பெண்ணை அணைத்துச் சிறகடக்கத்
தான்கண் டிருக்குமெந் தாய்

89 தாங்குமோ வத்தை சடைக்காடன் தேவிசெம்
பூங்கமலத் தாள்விடு புக்கம்ம—ஆங்கருமை
மைத்துனியே பாரென்று வாயிற்கை வைத்துன்சீர்
அத்தனையுஞ் செப்புவளால்

90 ஆங்கிலப் பெண்ணாள் அகமகிழ்ந் தின்புற்று
வீங்கு கடலாடை மேதினியில்—ஓங்கத்
தமிழ்த்தேவி இந்நாள் தலைவிரித் தேங்க
அமைத்தா யிதுவோ அறம்

91 அறபெட்டு நான்காற்றும் அம்பிகையும் நீயே
திறைகட்டா மன்னன் திரடோட்—குறும்யெற்றி
ஈயு மகளும் இலக்குமியும் ஈமத்தில்
ஏயு மகளுநீ யே

92 ஏயே இயமனும் என்செய்ய வல்லன்காண்
நீயே கலைவல்லி நெஞ்சிடையுள்—ளாயே
மொழித்திறத்தின் முட்டறுத்து முன்னா றுணர்த்
கழிப்பருங் கட்டறுக்க
[திக்

93 கண்ணொன்று காணக் கருத்துப் பிறிதெண்ண
என்னொன்று கற்பதென் றேங்கயான்—முன்னரே
கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றற்றநீ ஓதுவதென் னோ

94 ஓவியமே உன்னடியா ருள்ளுருகிப் பாடியநற்
காவியமே கற்பகமே கற்றுவலார்—ஏவியன
அன்புற்று நின்றுற்றும் அம்மையே போற்றியுன்
இன்புற்ற பாத வினை

95 விளித்து விளித்து விழிபிசைந்து நெஞ்சத்
தழுத்தி அழுத்தி அழுதால்—எழுத்துப்
பதம்பொருள் யாப்பணிப் பஞ்சம் பறக்க
நிதங்கலை நிற்குமே நேர்

96 நேயங்கொல் லாதேயுன் நேரிழா யீதென்ன
மாயங்கொல் லோவுயிரை வௌவினு—னேயமன்
பாண்டித் துரைத்தேவைப் பாரதத்தா யேற்றிவைத்
தூண்டா மணிவிளக்கைத் தொட்டு [த

97 தொல்லை இரும்பனுவல் தோமின் றுணர்த்திய
நல்லவை நாப்பண் நனிநல்ல—எல்லாம்
எடுத்து மொழிய இதயத்து வெள்ளை
உடுத்துறை யும்மோ ருரு

98 மோதம் பெருக முழுவெண் ணிலவெழும்பப்
போதம் பெருகவே புத்தகத்தாள்—பாதம்
விழுக சிரமே விழியேகாண் ணெஞ்சே
தொழுக அதுவே துணை

99 வேலை பிறிதின்றி வெண்டா மரையாளைக்
காலை எழுந்து கரங்கூப்பி—மாலை
புனைந்தேன் இணைப்பதம் போற்றினே னம்மே
நினைந்தேயென் னுள்ளத்து நில்

100 நினைவெல்லாம் நின்னவே நெஞ்சிடையான் காணுங்
கனவெல்லாம் நின்னவே கண்டாய்—புனையிழாய்
புன்புலால் யாக்கையும் புந்தியும் நின்னவென்
அன்பு முயிருநின் ன

முற்றிற்று